## ஜ்ஸகாத்

இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைகளில் ஸ்காத் இரண்டாவது அடிப்படையாகும். இஸ்லாத்தின் கட்டாயக் கடமையான வணக்கங்களில் இது ஒரு மகத்தான வழிபாட்டுமுறையாகும். திருக்ஃஆனில் இதனைப்பற்றி தொழுகையுடன் இணைத்து எண்ணற்ற இடங்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

**وَأَقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَءَاتُوا۟ ٱلزَّكَوٰةَ ﴿٤٣﴾ (البقرة:43)**

பொருள்: *தொழுகையை நிலைநாட்டுங்கள், ஜ்ஸகாத்தும் கொடுத்து வாருங்கள் (அல் பஃகரஹ்:43).* அல்லாஹ் தஆலா இதனை ஒருவருடைய மனம் மற்றும் பொருளினைத் தூய்மையாக்குவதற்காக என்று கூறியுள்ளான்:

**خُذْ مِنْ أَمْوَٰلِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا ﴿١٠٣﴾ (التوبة:103)**

பொருள்: *அவர்களுடைய பொருள்களிலிருந்து தானத்தை வசூல் செய்து கொண்டு அதன் மூலம் அவர்களைத் தூய்மையாக்குவீராக, நல்வழியில் அவர்களைமுன்னனேறச் செய்வீராக(அத் தவ்பஹ்:103).* இதனை செலுத்தாமலிருப்பவர்களுக்கு அல்லாஹ் தஆலா மிகக் கடுமையான எச்சரிக்கைகளையும் செய்துள்ளான்.

**وَٱلَّذِينَ يَكْنِزُونَ ٱلذَّهَبَ وَٱلْفِضَّةَ وَلَا يُنفِقُونَهَا فِى سَبِيلِ ٱللَّهِ فَبَشِّرْهُم بِعَذَابٍ أَلِيمٍ ﴿٣٤﴾ (التوبة:34)**

பொருள்: *எவர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமலிருக்கின்றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை இருக்கின்றது எனும் நற்செய்தியினை நீர் அறிவிப்பீராக (அத் தவ்பஹ்:34)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**مَنْ آتَاهُ اللَّهُ مَالًا، فَلَمْ يُؤَدِّ زَكَاتَهُ مُثِّلَ لَهُ مَالُهُ يَوْمَ القِيَامَةِ شُجَاعًا أَقْرَعَ لَهُ زَبِيبَتَانِ يُطَوَّقُهُ يَوْمَ القِيَامَةِ، ثُمَّ يَأْخُذُ بِلِهْزِمَتَيْهِ – يَعْنِي بِشِدْقَيْهِ – ثُمَّ يَقُولُ أَنَا مَالُكَ أَنَا كَنْزُكَ (متفق عليه)**

பொருள்: *எவர் ஒருவருக்கு அல்லாஹ் தஆலா பொருளைக்கொடுத்தும் அவர் அதற்கான ஜ்ஸகாத்தைக் கொடுக்கவில்லையோ, அவர்களுக்கு அந்த செல்வம் ஒரு பயங்கரமான பாம்பின் வடிவத்தில் ஆக்கப்படும், அதன்*

www.uzairfalahi.com

*கண்களின்மீது இரண்டுகரும்புள்ளிகள் இருக்கும். பின்பு, அந்த பாம்பு அவனுடைய கழுத்தில் மாட்டப்பட்டுவிடும். அது அவனுடைய காதுக்குப் பின்னாலுள்ள அவனுடைய கீழ்த்தாடைகளைப் பிடித்துக்கொண்டு கூறும் நான்தான் உன்னுடைய செல்வம், நான்தான் உன்னுடைய பொக்கிஷம் (புக்ஹாரி, முஸ்லிம்).*

## ஜ்ஸகாத்தின் பொருள்

அரபிமொழியில் ஜ்ஸகாத் என்பதன் பொருள், கூடுதல் மற்றும் சுத்தமாகுதல் என்பதாகும். மார்க்கச்சட்டத்தின் அடிப்படையில் அது அல்லாஹ் ஒருவனுக்கு அளித்துள்ள செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அதற்கான நிபந்தனைகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகளில் செலவு செய்யப்படும் பொருளாகும்.

## ஜ்ஸகாத் பற்றிய கட்டளைகள்

ஜ்ஸகாத் ஒரு குறிப்பிட்ட அளிவிலான பொருள் மற்றும் செல்வத்தினைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் மீதும் கடமையாக்கப் பட்டுள்ளது. சொத்தின் இந்தக் குறிப்பிட்ட அளவு **நிஸாப்** எனப்படும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

**وَأَقِيمُواْ ٱلصَّلَوٰةَ وَءَاتُواْ ٱلزَّكَوٰةَ ﴿٤٣﴾ (البقرة:43)**

*பொருள்: தொழுகையை நிலைநாட்டுங்கள், ஜ்ஸகாத்தும் கொடுத்து வாருங்கள் (அல் பஂ◌ஃகரஹ்:43).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**أُمِرْتُ أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتَّى يَشْهَدُوا أَنْ لاَ إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ، وَيُقِيمُوا الصَّلاَةَ، وَيُؤْتُوا الزَّكَاةَ، فَإِذَا فَعَلُوا ذَلِكَ عَصَمُوا مِنِّي دِمَاءَهُمْ وَأَمْوَالَهُمْ إِلَّا بِحَقِّ الإِسْلاَمِ، وَحِسَابُهُمْ عَلَى اللَّهِ (متفق عليه)**

*பொருள்: மக்கள் அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை لاَ إِلَهَ إِلَّا اللَّهُ என்றும், முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் அவர்கள் தொழுகையை நிலைநாட்டி, ஜ்ஸகாத்தும் கொடுக்காத வரையில் அவர்களோடு போரிடுமாறு அல்லாஹ்வின் புறமாக எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. அவர்கள் இவ்வாறு செய்வார்களேயானால், என்னிடமிருந்து அவர்களுடைய உயிர் மற்றும் பொருள் ஆகியவற்றை பாது*

www.uzairfalahi.com

*காத்துக்கொள்வார்கள், இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டவைகளைத் தவிர. அவர்களுடைய கேள்வி கணக்கு அல்லாஹ்வின் பொறுப்பாக உள்ளது. (புக்ஹாரி,முஸ்லிம்).*

*அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

**فَإِن تَابُواْ وَأَقَامُواْ ٱلصَّلَوٰةَ وَءَاتَوُاْ ٱلزَّكَوٰةَ فَخَلُّواْ سَبِيلَهُمۡۚ ﴿٥﴾ (التوبة:5)**

*பொருள்:* ***அவர்கள் பாவமன்னிப்புக்கோரி தொழுகையை நிலைநாட்டி ஜ்ஸகாத்தும் கொடுத்தால் அவர்களைவிட்டுவிடுங்கள்****(அத்தவ்பஹ்:5)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் மஅன் (ர) அவர்களை எமன் நாட்டிற்கு அனுப்பியபோது அவர்களிடம் கூறிர்கள்:*

**إِنَّكَ تَقْدَمُ عَلَى قَوْمٍ أَهْلِ كِتَابٍ، فَلْيَكُنْ أَوَّلَ مَا تَدْعُوهُمْ إِلَيْهِ عِبَادَةُ اللَّهِ، فَإِذَا عَرَفُوا اللَّهَ، فَأَخْبِرْهُمْ أَنَّ اللَّهَ قَدْ فَرَضَ عَلَيْهِمْ خَمْسَ صَلَوَاتٍ فِي يَوْمِهِمْ وَلَيْلَتِهِمْ، فَإِذَا فَعَلُوا، فَأَخْبِرْهُمْ أَنَّ اللَّهَ فَرَضَ عَلَيْهِمْ زَكَاةً مِنْ أَمْوَالِهِمْ وَتُرَدُّ عَلَى فُقَرَائِهِمْ، فَإِذَا أَطَاعُوا بِهَا، فَخُذْ مِنْهُمْ وَتَوَقَّ كَرَائِمَ أَمْوَالِ النَّاسِ(متفق عليه)**

*பொருள்: நீங்கள் வேதம் அளிக்கப்பட்ட ஒரு சமூகத்தாரிடம் செல்கின்றீர்கள், நீங்கள் முதலில் அவர்களுக்கு அல்லாஹ்வை அடிபணிந்து வழிபடுமாறு அழையுங்கள். அவர்கள் உங்கள் ஆணையை ஏற்று நடப்பார்களேயானால் அவர்களுக்குக் கூறுங்கள், அல்லாஹ் தஆலா அவர்கள்மீது இரவு பகலில் ஐவேளைத் தொழுகையை கடமையக்கியிருக்கின்றான். அவர்கள் உங்கள் ஆணையை ஏற்று நடப்பார்களேயானால் அவர்களுக்குக் கூறுங்கள், அல்லாஹ் தஆலா அவர்கள்மீது ஜ்ஸகாத்தைக் கடமையக்கியிருக்கின்றான். அது உங்களில் வசதி படைத்தவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றது மற்றும் அவர்களில் தேவையுற்றவர்களிடம் பகிர்ந்தளிக்கபட்டுவிடும். அவர்கள் உங்கள் ஆணையை ஏற்று நடப்பார்களேயானால், நீங்கள் அவர்களிடம் உள்ள செல்வத்தில் சிறந்ததையே எடுத்துக்கொள்ளாமல், நீங்கள் வசூலிக்கும் பொருள் நடுத்தரமான நிலையிலுள்ளதாகவே பெற்றுக்கொள்ளுங்கள் (புக்ஹாரி,முஸ்லிம்).*

www.uzairfalahi.com

**ஜ்ஸகாத் கடமையாக்கப்பட்டதற்கான விவேகம்**

*எந்த ஒரு பொருளின்மீதான ஜ்ஸகாத் கொடுக்கப்பட்டுவிடுகிறதோ அல்லாஹ் தஆலா அந்த சொத்தை மக்களுடைய தீய எண்ணங்கள் மற்றும் கண் திருஷ்டியிலிருந்தும்தவறான சதித்திட்டங்களிலிருந்தும் பாதுகாப்பளிக்கின்றான். ஜ்ஸகாத் கொடுப்பது ஏழைகள் மற்றும் தேவையுள்ளவர்களுடனான*

சமத்துவம் மற்றும் அவர்களுடைய துயரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும். இது முஸ்லிம்களிடையேயான பரஸ்பர சமூகப் பாதுகாப்பு, சகோரத்துவம் மற்றும் அவர்களுக்கிடையிலான அன்பின் உத்திரவாதமாகும். இதன் காரணமாக, மனிதனிடத்தில் செவ்வத்தின் மீதான பேராசை, கஞ்சத்தனம் மற்றும் பொருளை அதிக அளவில் சேகரித்தும் பதுக்கியும் வைக்கும் தீய பழக்கங்களின் வேரறுந்துவிடுகின்றது. ஜ்ஸகாத் கொடுப்பதன் மூலம் செல்வந்தர்களிடையே தாராள மனப்பான்மையும் கொடையின் பழக்கமும் உண்டாகிறது. ஜ்ஸகாத் கொடுப்பது மனிதர்களிடையே தங்களுடைய செல்வத்திலிருந்து மக்களுக்குப் பயன்தரும் வகையிலான சேவைகள் மற்றும் செயல்களுக்காக அளிக்கவும் அல்லாஹ்வின் கருணை மற்றும் அருளை அதிகமாகப்பெற்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தத் தூண்டுதலாகவும் இருக்கின்றன.

* * *

www.uzairfalahi.com